## சக்தி பௌண்டேஷன் - தமிழ் CAC வகுப்பு
## Uni5 பக்த விஜயம் - 45. ஸ்ரீகேசவ் மஹராஜ்

ஒரு குருவை உண்மையாகவே அண்டி அவர் மூலம் தன்னை ஆன்மீகப் பாதையில் வழிநடத்திச் செல்லும் வாழ்க்கையில் எப்போதுமே துன்பங்கள் வரினும், அவரது அருளால் ஞானத்தால் தீர்த்துக் கொள்ளுதல் முதியும்.எவ்வித ப்ரதிபலனையும் எதிர்பாராது குரு சேவை செய்யும் அன்பருக்குக் குருவருள் இறைவனை விரைவில் காட்டிக் கொடுத்துவிடும், அவரது இன்னருள் பல துன்பங்களையும் தீர்க்கும்.

**மாறாத காதலால் மாறாத அழகு**

விஜய்பூர் வடதேசத்தில் உள்ள ஒரு சிற்றூர்.அவ்வூரில் வாழ்ந்த மஹான் கேசவ்ஜி.மிகவும் உண்மையான க்ருஷ்ண பக்தர் இவர.இவர் வாழ்க்கையில் மேற்கொண்ட தூய்மையும் பாவ பக்தியும் மந்த்ர ஜெபமும் இவருக்கு வயோதிகத்தை ஏற்படுத்தவில்லை.எப்பொதும் ஸ்ரீக்ருஷ்ண ஸ்மரணையில் ஈடுபட்டதால் மிக்க தேஜஸ்வியாய் வாழ்கிறார்.

இவரது ஸ்ரீக்ருஷ்ண லீலை ப்ரவச்சனத்தில் மிகவும் சிறப்பு பால பருவ லீலைகள், பலர் அதன் மூலம் கண்ணனின் காலத்துக்கே விழிப்புணர்வால் சென்று பாவ பக்தியில் லயிப்பதும், பலர் சமாதி நிலையை அடைவதும் வழக்கம்.

ஒவ்வொரு ஏகாதசிக்கும் இவர் முன்னிலையில் வ்ரதமும் ப்ரவச்சனமும் கேட்டுக் கழிப்பது அப்பகுதி ஜனங்களுக்கு மிகவும் பிடித்த விஷயமாம்.போட்டி போட்டுக் கொண்டு தங்கள் ஊரில் ஏகாதசி வ்ரதம் செய்ய அழைப்பராம்.

ஒரு முறை இவர் கண்ணனின் பால காலம் கழிந்த கோகுலத்துக்கு அருகில் முகாமிட்டு ஏகாதசி வ்ரதம் அனுஷ்டித்தார்.எளிய ஜனங்களும் மிகவும் அன்புடன் அவருக்குப் பணிவிடை செய்து ஆன்மீக விழிப்புணர்வுடன் அந்நாளைக் கழித்தனர்.

மாலையில் மிகவும் கோலாகலமாக அனைவரும் கோகுலத்தை நோக்கி பஜனைப் பயணம் செய்ய ஆசைப்பட, அவரும் ஏற்றுக் கொண்டு மிக உயர்ந்த அருமையான பஜனைப் பயணம் மேற்கொள்கிறார்.கூட்டம் பல ஊர்களிலும் இருந்து சேர்கிறது.

நடு இரவில் அனைவரும் கோகுலம் சேர்ந்தனர்.ஏகாதசி வ்ரதம், தண்ணீர் கூடப் பருகாமல் இருக்கும் வ்ரதம், சதா பஜனை என அன்பர்கள் சற்று உடல் தளர்கிறார்கள். அப்போது கேசவ்ஜி ஒரு அன்பனை அழைத்துப் பணம் கொடுத்து,

சுக்கும் வெல்லமும் வாங்கி வருமாறு கூறினார்.

**இருட்டில் வாங்கிய வினை**

அன்பர்க் கடை வீதிக்குச் செல்ல அங்கே ஒரே ஒரு கடை தான் இருந்தது.அதையும் பூட்டும் தருவாயில் காண்கிறார், வந்த விஷயத்தை விளக்க; கடைக்காரர், "ஆஹா! கேசவ்ஜியின் அன்பர்களின் வ்ரதம் இருக்க அடியேனின் உதவி" என்று விரைவில் இருட்டில் கடைக்குள் சென்று வெல்லமும் சுக்கும் கொண்டு வந்து அளித்துப் பணமும் பெற மறுக்கிறான்.

விடியல் பொழுதில் வெல்லத்தையும் சுக்கையும் இலையில் வைத்தார் கேசவ்ஜி.தன் ஆத்மார்த்த கோகுல்ஜி விக்ரஹத்துக்கு நிவேதனம் செய்ய முற்பட்ட போது அவை எலி பாஷாணம் என்பதை உணர்கிறார்.அமைதியாக அதையே நிவேதனம் செய்து தானும் உண்டு அனைவருக்கும் தீர்த்தம் கலந்து அளிக்கிறார்.

**குரு எதற்கு?**

மறுநாள் வெளிச்சத்தில் தான் விஷத்தை அளித்ததை உணர்ந்த கடைக்காரன் ஓடோடி வருகிறான், கேசவ்ஜியிடம் தன் தவற்றைக் கூற, "**பக்த! கவலை விடுக! நீ தெரியாமல் இருட்டில் விஷத்தத்தை அளித்தது எமக்குத் தெரியும்.எனினும் இதோ இக்கூட்டத்துக்கு முன் ஜென்ம வினை பாக்கி உண்டு.போன ஜென்மத்தில் இவர்கள் கோகுலத்தில் உள்ள மக்களிடம் ஏற்பட்ட கருத்து வேறுபாட்டாலும் பகையாலும் குளத்து நீரில் விஷம் வைத்தனர், அதை உணர்ந்த நீ ஊர் மக்களிடம் கூறி பல பலிகளைத் தடுத்தாய்.ஆனால் நீ தான் முதலில் விஷத்தைக் கலக்கும் பாவத்தைக் கூறினாய்.ஆனால் மனம் மாறினாய்! ஆன்மீகப் பணியில் நீங்கள் இப்பிறவியில் தூய்மை பெற்று வருவதால் அவ்வினை இத்தோடு போனது.கவலை விடுக, அவரவர் வீட்டில் அவரவர் நிம்மதியாக இருக்கிறார்கள், பார்!**" என்று ஒரு குருவாகத் தான் செய்ய வேண்டிய வினை தீர்க்கும் வேலையைச் செய்து முடித்தார் கேசவ்ஜி.

இவரது புகழ் பல தேசங்களுக்கும் பரவியது.இவரது வழிகாட்டலின் கீழ் பலர் ஆன்மீக உயர்ச்சி பெற்றனர்.

ஹரி ஓம்!